மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : முதலில் 1964-ல் பாளையம்கோட்டையில் இந்திய மருத்துவக் கல்லூரிதொடங்கப்பட்டது. சித்த மருத்துவத்திற்கு 30 இடங்களும், ஆயுர்வேதத்திற்கு 20 இடங்களும், யுனானிக்கு 11 இடங்களும் ஒதுக்கப்பட்டன. ஆயுர் வேதத்திற்கும், யுனானிக்கும் யாரும் வராத காரணத்தால், 65 இடங் களும் சித்த மருத்துவதத்திற்கே தரப்பட்டன. பிறகு எண்ணிக்கை அதிகமாகிறது என்று கருதி, 30 மாணவர்கள் ஆண்டு ஒன்றுக்கு எடுக்கும் நிலைமை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதலில் கூறியபடி, அவர்களை வேலையில் அமர்த்தும் முயற்சியில், அதற்கென்று நியமிக்கப் பட்டுள்ள தனி இயக்குனர் விஷயத்தை ஆராய்ந்து வருகிறார். முடிவு தெரிந்தபிறகு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி என்று சொல்கிற முறையில் பரிட்சையில் தேறி விட்டு வேலை கிடைக்காமல் இருப்பதாகக் கூறினார்கள். இந்த சித்த வைத்தியத்தில் ஏராளமான தைலங்களையும், லேகியங்களையும் மக்கள் உபயோகிக்க வேண்டியிருப்பதால், அவற்றிற்காக மக்கள் அலைந்து கொண்டிருப்பதால், அப்படி அவற்றைத் தயாரிப்பவர்களுக்கு அரசாங் கம் 'எய்டு' அதாவது பண உதவி செய்து, அந்த மருந்துகளைத் தயாரித்து நாட்டிலே வியாபாரம் செய்ய சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பி னர் கூறியதைப் போன்று யாராவது இந்தத் தொழிலை மேற்கொண்டு மருந்துகளை உற்பத்தி செய்ய முன்வந்து உதவி தேவை என்று கேட்டால், அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்கலாம்.

Labour Disputes

*4. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Labour and Backward Classes be pleased to state :

(*a*) whether it is a fact that the Government have requested the Government of India to transfer the power to deal with Labour disputes in Government of India undertakings to the State Labour Department ; and

(*b*) if so, the reply received from the Government of India ?

தொழிலாளர் தகராறுகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழிலாளர்—பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இந்திய அரசு உடமை நிறுவனங்களில் எழும் தொழிலா ளர் தகராறுகளைத் தீர்ப்பதற்கு இம் மாநிலத் தொழிலாளர் துறைக்கு அதிகாரங்களை மாற்றித் தருமாறு இவ்வரசு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது குறித்து இந்திய அரசிடமிருந்து வந்த பதில் என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) இந்திய அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

27th November 1970]

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, என்னென்ன காரணங்களின் அடிப்படையில் இந்திய அரசினுடைய தொழில் நிறுவனங்களில் எழும் தொழில் தகராறுகளை, மாநிலத் தொழில்துறைக்கு மாற்ற வேண்டும் என்று இந்த அரசு கேட்டது என்று விவரம் தெரிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தொழில் நிறுவனங்களில் தொழில் தகராறுகள் ஏற்படும்போது, அவைகள் எந்த அளவுக்கு விரைவில் தீர்க்கப்பட முடியுமோ அந்த அளவுக்குத் தீர்க்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் அதற்கான அதிகாரங்களை இந்திய அரசிடமிருந்து மாநில அரசு கோரியிருக்கிறது.

திரு. எஸ். ராகவானந்தம் : தலைவர் அவர்களே, 'லா அண்டு ஆர்டர்' பிரச்னை மாநில அரசு சம்பந்தப்பட்ட பிரச்னையான காரணத்தாலும், சமீபத்தில் நடந்த மத்திய அரசு நிறுவனங்களில் ஏற்பட்ட தொழில் பிரச்னைகளில் நம் மாநில அரசு தலையிட்டு அந்த நிறுவனங்களிலெல்லாம் ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிற காரணத்தாலும், என்னென்ன தகவல்களை மத்திய அரசுக்கு மாநில அரசு அனுப்பியிருக்கிறது, எப்போது இதற்கான கடிதம் எழுதப்பட்டது, எவ்வெப்போது இதற்கான 'ரிமைண்டர்ஸ்' அனுப்பப்பட்டன, இதை மீண்டும் மாநில அரசு வலியுறுத்தும் உத்தேசம் இருக்கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த அடிப்படையில் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட வேண்டும் என்ற காரணங்களைச் சொன்னார்களோ அந்தக் காரணங்களையெல்லாம் வலியுறுத்தித்தான் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. முதலில் 11-8-1970-ல் மடல் தீட்டப்பட்டது. அடுத்து 13-11-1970-ல் இது குறித்து நினைவூட்டும் மடல் தீட்டப்பட்டது. இதற்கு விரைவில் பதில் மத்திய அரசாங்கத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. ராஜாராம் : சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பொறுப்பு மாநில ஆசைச் சேர்ந்ததாகும். இந்த மாநிலத்தில் எங்கே அமைதி ஒழுங்குக் குறைவு ஏற்பட்டாலும், அதற்குக் கடைசியில் பொறுப்பை நாம் மேற்கொண்டு அதற்கு பதில் சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அப்படியிருக்கும்போது, இந்த மாநிலத்தில் எந்தத் தொழிற்சாலையில்—அது மத்திய அரசின் தொழிற்சாலையானாலும் சரி; மாநில அரசின் தொழிற்சாலையானாலும் சரி, இன்னும்—'பிரைவேட்'—அல்லது தனியார் தொழிற்சாலையானாலும் சரி, தொழிற் தகராறு ஏற்பட்டாலும், அங்கே உண்டாகும் தொழில் அமைதியின்மையைத் தீர்த்து அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இந்த மாநில அரசுக்கு உண்டு. எனவே இதை மத்திய அரசாங்கத்திற்கு வற்புறுத்தி எழுதி, இதற்கான அனுமதியைப் பெற்று எல்லாத் தொழிற் தகராறுகளையும் தீர்க்க இம்மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நமது கழக அரசின் கொள்கையை வரவேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அவர் எந்தெந்தக் காரணத்தின் அடிப்படையில் மத்திய அரசுக்கு நம் கோரிக்கையைத் தெரிவிக்க வேண்டும் என்று இங்கே குறிப்பிட்டார்களோ, அந்தக் காரணங்களின் அடிப்படையில் தான் நம் அரசிடமிருந்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியனுப்பப்பட்டது. அது மட்டுமன்றி, நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 10-4-1970 அன்று நடைபெற்ற தென் மண்டல தொழிலாளர்கள் நல அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு நம்முடைய கொள்கையை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். இந்தக் கருத்தும் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப் படையில், மத்திய அரசிலிருந்து தக்க பதில் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். ராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1967-க்கு முன்னால் இருந்த அரசு இதுபோன்று மத்திய அரசு தொழில் நிறுவனங்களில் ஏற்படும் தொழில் தகராறுகளையும் மாநில அரசே தீர்க்கும் வகையில் அதிகாரம் வேண்டும் என்று கேட்டு கடிதம் ஏதேனும் எழுதியிருக்கி றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, நான் அறிந்த வரையில் அப்படி ஏதுமில்லை என்றே கருதுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : நம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட தென் மண்டல தொழிலாளர் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பேசினார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதுபற்றி மத்திய அரசாங் கத்தின் அபிப்பிராயம் அப்போதே தெரிவிக்கப்பட்டதா அல்லது இப் போதாவது அதுபற்றி ஏதாவது தெரிந்ததா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அந்தக் கூட்டத்தில் நமது மாண்புமிகு முதலமைச்சர் பேசிய கருத்துக்களில் சிலவற்றை வைத்துத் தான் இங்கேயிருந்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதைத் தவிர வேறு தனியாகக் கடிதம் எழுதவில்லை. அவர் பேசிய கருத்துக்களை வைத்துத்தான் எழுதப்பட்டது. இந்தக் கருத்தையும் மத்திய அரசு நினைவில் கொண்டு பதில் அனுப்பும் என்று எதிர்பார்க் கிறோம்.

Secondary Grade Teachers

*5. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Food and Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that orders for the upgrading of certain Secondary Grade Teachers working in Higher Grade posts in Thottiam Panchayat Union, Tiruchirapalli District were later withdrawn in 1969;

(*b*) the number of teachers affected by the order ; and

(*c*) the reasons for such cancellation of the order ?